(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 285]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2013 யூன் 21, வெள்ளிக்கிழமை, பி.ப. 1.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2523/ '12

1.

கௌரவ புத்திக பதிரண,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வ/ப மில்கோ (தனியார்) நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாட்டொகுதியில் உள்ளடங்கியுள்ள விசாரணை உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2010 மே மாதம் முதல் இற்றைவரை இந்நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு விசாரணை உத்தியோகத்தரினதும் பெயர், முகவரி, நியமிக்கப்பட்ட திகதி, பிறந்த திகதி, நியமிக்கப்பட்ட திகதியன்று உள்ளவாறு வயது, கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) இவர்கள் நியமிக்கப்பட்டபோது பகிரங்க அறிவித்தல்கள் மூலமாக கோரப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டதா என்பதையும்;

(iv) இன்றேல், மேற்படி நியமனங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) நியமிக்கப்பட்ட திகதி முதல் 2012 பெப்ருவரி 29 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில்,

(i) ஒவ்வொரு மாதத்திலும் விசாரணை உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளம், கொடுப்பனவுகள், போக்குவரத்து செலவுகள், ஒருங்கிணைந்த படிகள், உணவுப் படி, மிகை ஊதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விசாரணை அறிக்கைகளினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) விசாரணை உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iv) நீக்கப்பட்டவர்களின் பெயர்கள், நீக்கப்பட்ட திகதி மற்றும் நீக்கப்படுவதற்கான காரணம் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2574/ '12

2\.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பெண்கள் பட்டயமொன்று வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இந்தப் பட்டயத்தில் அடங்கியுள்ள அடிப்படைப் அம்சங்கள் யாவை என்பதையும்;

(iii) இலங்கை பெண்கள் பட்டயத்திற்கு சட்ட ரீதியான அதிகாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2802/ '12

3\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டுவஸ்நுவர கிழக்கு மற்றும் மேற்கு பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் சமுர்த்தி பயனாளிகள் குடும்பங்களை இலக்காகக் கொண்டு தும்பினாலான பாத்திரங்களை உற்பத்தி செய்யும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iii) அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படிக் கருத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த உற்பத்தி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி உற்பத்தியைக் கொள்வனவு செய்யயும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(vii) தற்போது இந்தக் கருத்திட்டம் பெற்றுள்ள முன்னேற்றம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2827/ '12

4\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 முதல் 2011 வரை இலங்கையில் தொழில்புரிவதற்கு அனுமதியளிக்கப்பட்ட இந்தியத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையிலும்;

(ii) இந்திய நாட்டவர்களுக்கான வீசா தேவைப்பாடுகளில் மிகுந்த அதிகரிப்பு ஏற்படுவதற்கான காரணத்தையும்;

(iii) வருகைதந்துள்ள இந்தியர்களுக்கான வீசாவுக்கு ஏன் கட்டணம் அறவிடப்படுகின்றது என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் வேறு ஏதாவது நாட்டின் 500 இற்கும் அதிகமான தொழிலாளர்கள் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) வெளிநாட்டவர்களை தொழில்புரிவதற்கு இங்கு அனுமதிப்பதால் இலங்கை பெற்றுக்கொள்ளும் நன்மைகள் யாதென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3055/ '12

5.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேசிய ஔடதங்கள் ஒழுங்குமுறையாக்கல் அதிகார சபையினால், நோயாளர்களுக்கு பக்கவிளைவுகள் ஏற்படக் கூடிய லிக்னொகேன் ஹைட்ரோக்குளோரைட்டு எனப்படும் ஜெல் வகையை 2012 ஏப்பிறல் மாதம் 9 ஆம் திகதியிலிருந்து பாவனையிலிருந்து அகற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள போதிலும் இன்னமுமே ஒரு சில மருத்துவமனைகளில் குறித்த ஜெல் வகை நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் பொருட்டு பயன்படுத்தப்படுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஜெல் வகையை பாவனையிலிருந்து அகற்றுவதற்கு வெற்றிகரமான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தற்போதுகூட குறித்த ஜெல் வகையை பயன்படுத்துகின்ற மருத்துவமனைகள் தொடர்பாக ஆராய்ந்து, அவற்றை பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) குறித்த ஜெல் வகைக்குப் பதிலாக, குறிப்பிட்ட பகுதியை உணர்விழக்கச் செய்வதற்காக நோயாளர்களுக்கு அனுகூலமான வேறொரு ஜெல் வகையை இறக்குமதி செய்யாதது ஏனென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2580/ '12

6.

கௌரவ சஜித் பிரேமதாச,— கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டின் தொழிலற்ற இளம் சந்ததியினருக்காக பிரதேச மட்டத்தில் கைத்தொழிற்சாலைகளை தாபிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், பிரதேச செயலாளர் மட்டத்தில் அத்தகைய கைத்தொழிற் சாலைகளைத் தாபிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றை அமுல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற திகதி யாது என்பதையும்;

(iii) அந்நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்குகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக எவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2706/ '12

7.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை பம்புரண சாரிபுத்ர மகா வித்தியாலயத்தில் மேலதிக ஆசிரியர்களைப் பற்றி மாத்தறை வலயக் கல்விக் காரியாலயத்தின் உத்தியோகத்தர்களால் 2012 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட கணக்காய்வின் போது நீண்ட சேவைகாலமுடைய மேலதிக ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி பெயர் பட்டியல் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் வித்தியாலயத்தின் லொக் புத்தகத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இவ்வித்தியாலயத்தின் தற்போதைய அதிபருக்கு நெருக்கமான மேற்படி பெயர்ப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களை அங்கேயே வைத்துக்கொண்டு கற்பித்தல் நேரசூசியுடைய குறைந்த சேவைக்காலத்தை கொண்ட வேறு ஆசிரியர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) அதிபரின் தான்தோன்றித்தனமான செயற்பாடு காரணமாக இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு பெரும் அநீதி நிகழ்ந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் மேலதிக ஆசிரியர்களைப் பற்றி வலயக் கல்விக் காரியாலயத்தினால் நடாத்தப்பட்ட கணக்காய்வின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2803/ '12

8.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கடற்றொழில் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தகர மீன் தயாரிப்புக்காக காலியில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலையின்,

(i) ஆரம்பத் திகதி யாதென்பதையும்;

(ii) உரிமையைக் கொண்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(iii) எதிர்பார்க்கப்படும் வருடாந்த உற்பத்தி எவ்வளவென்பதையும்;

(iv) அடைப்பதற்காக பயன்படுத்தப்படும் மீன் வகை அல்லது வகைகள் யாவையென்பதையும்;

(v) நாளாந்த மீன் தேவைப்பாடு எவ்வளவென்பதையும்;

(vi) உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் மேற்கூறிய மீன் வகைகளின் அல்லது வகையின் உள்நாட்டு நாளாந்த விளைச்சல் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறிய தகர மீன் தொழிற்சாலைக்குத் தேவைப்படும் மீன்கள் தற்போது இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல், அவ்வாறு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி மீன்கள் இறக்குமதி செய்யப்படும் அல்லது அவ்வாறு செய்ய எதிர்பார்க்கப்படும் நாடுகள் யாவை என்பதையும்;

(iv) மாதாந்தம் இறக்குமதி செய்யப்படும் அல்லது அவ்வாறு செய்ய எதிர்பார்க்கப்படும் மீனின் அளவு எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2896/ '12

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது கோமறைக் கழகம் இயங்குகிறதா என்பதையும்;

(ii) இதற்கு முன்னர் அத்தகைய கழகம் எப்போதாவது இயங்கியதா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், அது இயங்கிய காலப்பகுதி எது என்பதையும்;

(iv) கோமறைக் கழகம் அல்லது அதனையொத்த அமைப்புகள் இல்லாதொழிக்கப்பட்ட சூழ்நிலையில், நீதித்துறை முறையில் மேன்முறையீடுகளை மேற்கொள்வதற்கு இன்று காணப்படுகின்ற பொறிமுறைகள் எவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சுதந்திரமடைந்தது முதல் இன்று வரை பிரயோகிக்கப்பட்ட கடந்த காலத்தையும் அளாவிய சட்டங்கள் எவை என்பதையும்;

(ii) அவை எப்போது சட்டவாக்கம் செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டன என்பதைத் தனித்தனியாகவும்;

(iii) இலங்கையில் பொதுவாக கடந்த காலத்தையும் அளாவிய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதையும்;

(iv) இல்லையெனில், 2003 — 2004 இல் வரி மன்னிப்புச் சட்டம் எவ்வாறு அமுல்படுத்தப்பட்டது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

3056/ '12

10.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 5 வருட காலத்தில் சுகாதாரத் துறையில் தரமற்ற ஔடதங்கள் இறக்குமதி செய்யப்பட்டமை, ஔடதங்களை சரியான முறையில் களஞ்சியப்படுத்தாமை, ஔடதங்களை தவறான முறையில் மறைத்து வைத்திருத்தல், காலாவதியான ஔடதங்களையும் மருத்துவ உபகரணங்களையும் மீண்டும் உபயோகித்தல் மற்றும் பதிவு செய்யப்படாத ஔடதங்களை இறக்குமதி செய்தல் போன்ற பல்வேறு முறைகேடுகள், ஊழல்கள் மற்றும் மோசடிகள் பெருமளவில் இடம்பெற்றுள்ளன என்பதையும்;

(ii) இவை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்னமுமே அமைதிப் போக்கினை கடைப்பிடித்து வருகிறார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி காலத்தில் சுகாதார அமைச்சில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள், ஊழல்கள் மற்றும் மோசடிகள் தொடர்பான அறிக்கையொன்றை இந்த சபைக்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி ஊழல்கள், மோசடிகள் மற்றும் முறைகேடுகளுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) நோயாளர்களான மக்கள் உயிர் ஆபத்துக்கு உள்ளாக்குகின்ற வகையில் இடம்பெறும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறான முறைகேடுகள் தொடர்பாக இதுவரை உரிய கவனம் செலுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2581/ '12

11.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் மின்சார வசதியற்ற கிராமங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) குறித்த கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

மாவட்ட வாரியாக வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே கூறப்பட்டுள்ள மின்சார வசதியற்ற கிராமங்களுக்கு எக்காலப்பகுதியில் மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும்;

(ii) 2012ஆம் ஆண்டினுள் வட மாகாணத்தில் மின்சார வசதியற்ற அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரத்தை வழங்கக் கூடிய இயலுமை உள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2707/ '12

12.

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் உதவி பிராந்திய முகாமையாளர் பதவிக்காக போட்டிப் பரீட்சையொன்றும் நேர்முகப் பரீட்சையொன்றும் நடத்தப்பட்டு, சேவையில் ஈடுபட்டுள்ள வேலைத்தள உத்தியோகத்தர் மற்றும் களஞ்சிய உத்தியோகத்தர் பதவிகளை வகிக்கின்றவர்களிலிருந்து தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்படி போட்டிப் பரீட்சை நடத்தப்படாது நேர்முகப் பரீட்சையின் மூலம் மாத்திரம் மேற்படி பதவிக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேலே (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புகளை நிறுத்திவிட்டு 2012 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தவாறு மேற்படி ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2805/ '12

13.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை துறைமுகத்தில் பிரவேசத்திற்கு தடையாகவிருந்த கருங்கற்பாறையின் அளவு எத்தனை சதுர அடி என்பதையும்;

(ii) மேற்படி கருங்கற்பாறையை அகற்றுவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iii) இன்றளவில் குறித்த கருங்கற்பாறை முற்றாக உடைத்து அகற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அதற்கென செலவான மொத்தப் பணத்தொகை மற்றும் அத்தொகையைப் பெற்றுக்கொண்ட விதம் யாதென்பதையும்;

(v) கருங்கற்பாறையை அகற்றும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகச் செயற்பட்ட கம்பனியின் பெயர் யாதென்பதையும்;

(vi) குறித்த கம்பனி எந்த நாட்டுக்குச் சொந்தமானது என்பதையும்;

(vii) சரக்குக் கப்பல்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்தினுள் பிரவேசிப்பதற்கு இடையூறாகவிருக்கும் பிற தடைகள் உள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2901/ '12

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கம் நோயாளிகளுக்கு இலவச சுகாதார சேவையைத் தொடர்ந்து இலவச மருந்து வழங்குதலையும் மேற்கொள்கிறதா எனவும்;

(ii) அவ்வாறெனில், 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கான மீண்டுவரும் செலவுக்காக சுகாதார அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகையையும்;

(iii) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இலவச மருந்துகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகையையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அரசாங்க வைத்தியசாலைகளில் அதிகளவில் குறித்துக் கொடுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட 25 மருந்துகளையும்;

(ii) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அம்மருந்துகளின் பெறுமதிகளை தனித்தனியாகவும்;

(iii) அவை இறக்குமதி செய்யப்பட்டவையா அல்லது இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டவையா என்பதையும்;

(iv) அரசாங்க வைத்தியசாலைகளில் மருந்துகள் கிடைக்காமையால் வெளி மருந்தகங்களிலிருந்து மருந்துகளை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளமை பற்றி நோயாளிகள் ஏன் முறையிடுகின்றனர் எனவும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வன விலங்குகள் மற்றும் தாவரங்களை பாதுகாக்கும் நோக்கத்தை முன்னிறுத்தி தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம் உருவாக்கப்பட்ட போதிலும், இன்றளவில் பல்வேறு அரசியல்வாதிகளினதும் வர்த்தகர்களினதும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அதன் சில பிரிவுகள் திருத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இன்றளவில் தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தில் திருத்தப்பட்டுள்ள பிரிவுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரிவுகள் திருத்தப்பட்ட பின்னர் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய சட்டம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கட்டளைச்சட்டத்தில் மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்களைச் சேர்ப்பதற்கான தேவையை முன்னிறுத்தி செயற்பட்டவர்கள் யாவர் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## அனுதாபப் பிரேரணை

1.

காலஞ்சென்ற பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன.

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

கௌரவ ஜோன் அமரதுங்க,— சிறப்புரிமை,— தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரவி கருணாநாயக்க அவர்களால் 2013, யூன் மாதம் 5ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

2.

இலங்கைக் கணனிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மார்ச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— 2011.08.15 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட தற்பொழுதைய கணக்காய்வாளர் தலைமையதிபதியான திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களின் சம்பளம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரவு அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 2011.08.15 ஆம் திகதியிலிருந்து SL-04-2006 சம்பள அளவுத்திட்டத்தின் 02 ஆம் படிநிலையான ரூபா. 48,940.00 இல் நிறுவி சம்பளம் வழங்குதலும், பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துதலும் மற்றும் சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்தலும் வேண்டுமென்றும் இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

12.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

16.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.